[1979 ஏப்ரல் 21

வட்டாரங்களில் 20 மருத்துவர்கள் பணியாற்றுகிறார்கள். சிறுநீர், ரத்த பரிசோதனை நிலையங்கள் அமைத்துக் கொடுத்தால்தான் அந்தப் பகுதி மக்களுக்கு உண்மையான சேவை செய்ததாகும். அதையெல்லாம் செய்து கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்தரராஜன் : ஒவ்வொன்றாக படிப்படியாகச் செய்வதற்கான திட்டம் அரசின் பரிசீலனையில் இருக்கிறது. நீண்ட காலத் தேவையாக இருந்த எக்ஸ்ரே மெஷின் பொருத்தப்பட்டு கிராம மக்கள் நல்வாழ்வுக்கு வழி செய்ய வேண்டுமென்ற எண்ணத்தில் முதலமைச்சர் அவர்கள் அனுமதியோடு அது நிறுவப்பட்டிருக்கிறது.

திரு. விஜயரகுநாத தொண்டமான் : எக்ஸ்ரே அமைப்பது பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மிக்க நன்றி. புதுக்கோட்டை வட்டத்திலும் சரி, வலையப்பட்டியிலும் சரி, எக்ஸ்ரே இருக்கும் இடங்களில் பிலிம் கிடைப்பதில்லை. இதனால் சமயத்தில் எக்ஸ்ரே எடுக்க முடியாமல் போகிறது. அதற்கு அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர் சௌந்தரராஜன் : தற்போது அத்தகைய நிலைமை ஏற்படுகிறது என்றுதான் மாவட்ட தலைமை மருத்துவமனைக்குத் தேவையான அளவுக்குப் பிலிம்கள் ஒதுக்கப்பட்டு அவ்வப்போது வட்ட மருத்துவமனைகளில் பிலிம்கள் தட்டுப்பாடு ஏற்பட்டால் மாவட்ட தலைமை மருத்துவமனையில் இருந்து பெற்றுக் கொள்ளலாம் என்ற வகையில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. எங்காவது இல்லையென்ற நிலை உருவாகி அதனால் மக்களுக்குத் தொல்லை ஏற்படுகிறது என்ற நிலை இருந்தால் அதை அரசு கவனத்திற்குக் கொண்டு வந்தால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

விருதாசலம் அரசினர் மருத்துவமனை

* வினா எண். 763 திரு. எம். செல்வராஜ் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) விருத்தாசலம் அரசினர் மருத்துவமனையை விஸ்தரிக்க உத்தேசம் உண்டா?

(ஆ) இந்த மருத்துவமனையில் X-ray கருவியும் ரத்தப் பரிசோதனை நிலையமும் ஏற்படுத்த உத்தேசம் உண்டா?

1979 ஏப்ரல் 21]

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். செளந்தரராஜன் :

(அ) உண்டு.

(ஆ) இந்த மருத்துவ மனையில் எக்ஸ்ரே கருவி அமைக்கவும் இரத்த சேமிப்பு நிலையம் அமைக்கவும் 1979-80-க்கான நிதியாண்டில் தேவையான நிதி ஒதிக்கீடு செய்யப்பட்டுள்ளது.

திரு. சி. கோவிந்தராஜன் : அந்த மருத்துவ மனையை விஸ்தரிக்க உத்தேசம் இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எத்தனை படுக்கைகளை அதிகப்படுத்த உத்தேசம் இருக்கிறது? எக்ஸ்ரே கருவி எப்போது நிறுவப்படும்? விருத்தாசலம் முனிசிபல் நகரமாகவும் வட்ட தலைமை இடமாகவும் இருக்கக்கூடிய காரணத்தால் அதிகப்படியான அளவுக்கு வியாதியஸ்தர்கள் வருகிற காரணத்தால் உடனடியாக விஸ்தரிக்க ஆவன செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். செளந்தரராஜன் : 1976 ஆம் ஆண்டில் விருத்தாசலம் அரசு மருத்துவ மனை 20 படுக்கைகள் கொண்டதாக இருந்தது. அதற்குப் பின்னால் 1977–ல் அங்கே 44 படுக்கைகள் கொண்டதாக உருவாக்கு வதற்காக வழிவகைகள் செய்யப்பட்டன. மேலும் அதிகப் படுக்கைகளை உருவாக்குவதற்காக வழிவகைகள் தற்போது இல்லை. தற்போது இரத்த சேமிப்பு நிலையமும், எக்ஸ்ரே கருவியும் அமைக்க இந்த நிதியாண்டில் ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது.

திரு. சி. ராமநாதன் : அமைச்சர் அவர்கள் விருத்தாசலம் தலைமை மருத்துவ மனையில் எக்ஸ்ரே கருவியும், இரத்த சேமிப்பு நிலையமும் ஏற்படுத்த இருப்பதாகச் சொன்னதற்காக மிக்க நன்றி. ஆனால் அந்தக் கட்டிடம் சுகாதார வசதியற்ற முறையில் செல்லும் பாதையிலே கழிப்பிடம் கட்டி அசுத்தமாகிக் கொண்டிருக்கிறது. அதை மாற்றியமைப்பதற்கு உத்தேசம் உண்டா? அந்தப் பகுதி மக்கள் உள் கிராமங்களில் இருப்பதால் அவர்களுக்கு உதவி செய்யும் வகையில் ஆம்புலன்ஸ் வண்டியைக் கொடுக்க அரசுக்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். செளந்தரராஜன் : அந்த மருத்துவ மனைக்கு நானே நேரில் சென்று பார்த்தேன். கழிப்பறை கட்ட வேண்டாத இடத்தில் கட்டியிருப்பதைக் கண்டு பிடித்து அதற்குப் பிறகு அதை மாற்ற வழிவகை செய்யப் பட்டிருக்கிறது. ஆம்புலன்ஸ் வண்டி வேண்டுமென்று கேட்டார்கள். இப்போதைக்கு இல்லையென்றாலும் விபத்திற் காகத் தனிப்பிரிவுகள் ஒவ்வொரு மாவட்டமாக ஏற்படுத்திக் கொண்டு வரும் நேரத்தில், தென்னாற்காடு மாவட்டத்திற்கு விரிவுபடுத்தும் நேரத்தில் இது பற்றி பரிசீலிக்கப்படும்.